ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1795/37 - 2013 ජනවාරි මස 31 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.31

*1795/37 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 6/2006.*

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

தேசிய லொத்தர் சபை விதிகள்

*1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு, 16 ஆம் பிரிவு மற்றும் 20 ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி தேசிய லொத்தர் சபையினால் ஆக்கப்பட்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள்.*

தவிசாளர்,
தேசிய லொத்தர் சபை.

கொழும்பு,
*2011, திசெம்பர் 05.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய லொத்தர் சபை விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் 'சபை' எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேசிய லொத்தர் சபை, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளில் பின்வரும் தேசிய லொத்தர்களை நடாத்துதல் வேண்டும் :-

(அ) மஹஜன சம்பத ;
(ஆ) வாசனா சம்பத ;
(இ) கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ ;
(ஈ) கொவிசெத ;
(உ) சுபிரி வாசனா சம்பத ;
(ஊ) ஜாதிக சம்பத ;
(எ) செவன சுரண்டல் லொத்தர் ; அத்துடன்
(ஏ) சமுர்த்தி சுரண்டல் லொத்தர்.

3. சபை மேற்சொல்லப்பட்ட 2 (அ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட மஹஜன சம்பத் தேசிய லொத்தரை இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் , ஞாயிற்றுக்கிழமையுமாக ஒவ்வொரு வாரமும் மூன்று சீட்டிழுப்புக்கள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மட்டும் உடையதாயிருத்தல் வேண்டும்.

(4) சீட்டுக்களை இலக்கமிடல், 000000 என்ற இலக்கத்திலிருந்து 999999 எனும் இலக்கம் வரையும் (1) என்ற எழுத்தைத் தவிர்த்து ஆங்கில அரிச்சுவடியில் உள்ள A தொடக்கம் Z வரையிலான ஆங்கில எழுத்தொன்றுடனும் அச்சிடப்படுதல் வேண்டும்.

(5) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, A தொடக்கம் Z வரையிலான ( I தவிர்ந்த) ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஓர் எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும். மேலதிகமாக பூஜ்ஜியம் தொடக்கம் ஒன்பது (0– 9) வரையிலான இலக்கங்களைக் கொண்ட ஆறு பீப்பாய்க்களிலிருந்து ஒவ்வொரு இலக்கத்தையும் தெரிவு செய்வதன் மூலம் ஆறு இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் ஒரு தொடர் இலக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சீட்டிழுப்புக்காக நவீன தொழில் நுட்ப முறையும் பயன்படுத்தலாம்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நாற்பத்தொன்பது (49% ) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒரு சீட்டிலுள்ள ஆங்கில எழுத்தும் ஆறு இலக்கங்களும், ஆங்கில எழுத்துடனும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து, பத்து மில்லியன் ரூபாவுக்கு ( 10,000,000 ரூபா) குறையாத சுப்பர் பரிசு, அச்சீட்டுக்கு வழங்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டுக்களில் உள்ள ஆறு இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட ஆறு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இரண்டு மில்லியன் ரூபா ( 2,000,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி ஐந்து இலக்கங்கள் தொடர்ச்சியாக வருகின்ற இடமிருந்து வலமாக தெரிவு செய்யப்பட்ட கடைசி ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபா ( 100,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(உ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி நான்கு இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் பத்தாயிரம் ரூபா ( 10,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி மூன்று இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா ( 1,000 ரூபா ) வழங்கப்படுதல் வேண்டும்;

(எ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி இரண்டு இலக்கங்கள் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி இரண்டு இலங்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபா (100 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஏ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுகளிலுள்ள கடைசி இலக்கம் (வலது பக்கம்) தெரிவு செய்யப்பட்ட கடைசி இலக்கங்களுடன் ஒத்திருக்கின்ற விடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருபது ரூபா (ரூ. 20) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் ஐந்து இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் ஐந்து இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் பத்தாயிரம் ரூபா ( 10,000 ரூபா ) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஒ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் நான்கு இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா (1,000 ரூபா ) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஓ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் மூன்று இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபா (100 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஔ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் இரண்டு இலக்கங்களும் இடமிருந்துவலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட இரண்டு இலங்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐம்பது ரூபா (50 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(க) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருபது ரூபா (ரூ. 20) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ங) வெல்லப்படும் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நாற்பத்தொன்பது (49%) சதவீதமான பணத்தொகையில் ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட எஞ்சிய அப்பணத்தின் ஐம்பது (50%) சதவீதமானது, அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசில் வரவு வைக்கப்படல் வேண்டும். அத்துடன் எஞ்சிய (50%) சதவீதமானது நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (Iஅ) என்னும் உட்பிரிவின் எற்பாடுகளுக்கிணங்க பரிசு ஒதுக்கற் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும்.

(ச) ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குதவற்குப் போதுமானதாக காணப்படாத விடத்து, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணமானது செலுத்தப்படவேண்டிய மீதிப்பணத்திற்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஞ) அவசியமாகக் கருதப்படுமிடத்து, சபையினால் நடாத்தப்படும் வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசு ஒதுக்கற் கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு சபை உரித்துடையதாதல் வேண்டும்.

4. சபை மேற்சொல்லப்பட்ட 2 (ஆ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட வாசனா சம்பத் தேசிய லொத்தரை, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் வாரமொருமுறை சீட்டிழுப்பு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசை மட்டும் உடையதாயிருத்தல் வேண்டும்.

(4) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, ஒன்று தொடக்கம் அறுபத்தொன்பது (1- 69) வரையான இலக்கங்களுள் நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். சுப்பர் பரிசைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக A தொடக்கம் Z வரையிலான ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஓர் எழுத்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும் சீட்டிழுப்பு இயந்திரத்தில், மீதமுள்ள அறுபத்தைந்து (65) இலக்கங்கங்களிலிருந்து மேலதிகமாக ஓர் இலக்கம் தெரிவு செய்யப்படல் வேண்டும். இது போனஸ் இலக்கமாகவிருத்தல் வேண்டும் ; அத்துடன் அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் ஒரு தொடர் இலக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கு இணங்க வழங்கப்படல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் மொத்த வரும்படியிலிருந்து நாற்பத்தேழு (47%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒரு சீட்டிலுள்ள ஆங்கில எழுத்தும் நான்கு இலக்கங்களும் தெரிவு செய்யப்பட்ட வெற்றிபெறும் ஆங்கில எழுத்துடனும் நான்கு இலக்கங்களுடனும் ஒத்திருக்குமிடத்து, அச்சீட்டுக்கு சுப்பர் பரிசாக பத்து மில்லியன் ரூபா (10,000,000 ரூபா ) க்குக் குறையாத தொகை வழங்கப்படல் வேண்டும் ;

(இ) சீட்டொன்றிலுள்ள நான்கு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஒரு மில்லியன் ரூபா (1,000,000 ரூபா) பணத்தொகை வழக்கப்படல் வேண்டும் ;

(ஈ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்களும், போனஸ் இலக்கமும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடன் போனஸ் இலக்கத்துடனும் ஒத்திருக்குமிடத்து அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஒரு இலட்சம் ரூபா (100,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படல் வேண்டும் ;

(உ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இரண்டாயிரம் ரூபா (2,000) ரூபா பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் இரண்டு இலக்கங்கள், தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும், நூறு ரூபா (100 ரூபா) பணத்தொகை வழங்கப்படல் வேண்டும் ;

(எ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஒரு இலக்கம் தெரிவு செய்யப்பட்ட இலக்கத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபது ரூபா (20 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஏ) ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டிற்கும் இருபது ரூபா (20 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) பரிசுகள் வழங்கப்பட்ட பின்னர், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையின் நாற்பத்தேழு (47%) சதவீதத்திலிருந்து ஏதும் பணத்தொகையானது எஞ்சியிருக்கும் பட்சத்தில் சொல்லப்பட்ட அத்தொகையிலிருந்து இருபத்தைந்து (25%) சதவீதமான அத்தொகை அடுத்து நடைபெறவுள்ள சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், எஞ்சிய எழுபத்தைந்து (75%) சதவீதமான தொகை நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும் ;

(ஒ) ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்கு போதுமானதாகக் காணப்படாதவிடத்து, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணம் அந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஓ) அவசியமாகக் கருதப்படுமிடத்து, சபையினால் நடாத்தப்படும் வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகளை வழங்க பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணத்தைப் பயன்படுத்துவதற்கு சபை உரித்துடையதாதல் வேண்டும்.

5. சபை மேற்சொல்லப்பட்ட 2 (இ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட கொழும்பு எயர்போர்ட் சுப்பர் ட்றோ தேசிய லொத்தரை, வரையறுக்கப்பட்ட கொழும்பு விமான நிலையம், வான் பயணச் சேவைகள், (இலங்கை) கட்டுநாயக்கா என்பதன் சார்பில் இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) ஒவ்வொரு லொத்தர் சீட்டும் 50 அமெரிக்க டொலர்கள் ($ 50) என்ற விலையில் அல்லது அதற்கு மாற்றப்படத்தக்க, சமனான பெறுமதியுடைய நாணய அலகில் விற்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சீட்டும் இரண்டு பிரதிகளில் இருத்தல் வேண்டும். அதன் மூலப்பிரதி சபையிடமும் இணைப்பிரதி வாங்குபவரிடம் இருத்தல் வேண்டும். சீட்டினை விலைக்கு வாங்குபவர் தனது பெயரையும், முகவரியையும் சீட்டிலே அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

(2) விற்கப்பட்ட ஒவ்வொரு ஆறாயிரம் சீட்டுக்கள் தொடர்பாகவும் ஒரு சீட்டிழுப்பு இடம்பெறுதல் வேண்டும்.

(3) லொத்தர் பரிசாக ஒரு சொகுசு மோட்டார் கார் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அதன் செலவு, காப்புறுதி, கேழ்வு (cif) என்பவற்றினது பெறுமதியானது சீட்டுக்களின் விற்பனை வரும்படியின் நாற்பத்தேழு (47%) சதவீதத்திற்கு மேற்படாததாய் இருத்தல் வேண்டும்.

(4) சீட்டுக்களுக்கு '1,000' தொடக்கம் 6999 வரையான இலக்கங்கள் இடப்படல் வேண்டும். நான்கு வெற்றிபெறும் இலக்கங்களை இடமிருந்து வலமாகக் கொண்டிருக்கும் சீட்டுக்கே பரிசு வழங்கப்படுதல் வேண்டும். ஒன்று தொடக்கம் ஆறு (1- 6) வரையான இலக்கங்களைக் கொண்டிருக்கும் ஒரு பீப்பாயிலிருந்து வெற்றிபெறும் இலக்கங்களின் முதலாவது இலக்கமானது தெரிவு செய்யப்படுதல் வேண்டும். ஏனைய இலக்கங்கள் பூஜ்ஜியம் தொடக்கம் ஒன்பது வரையான (0-9) இலக்கங்களைக் கொண்டிருக்கும் மூன்று பீப்பாய்களிலிருந்து தெரிவு செய்யப்படல் வேண்டும். சீட்டிழுப்பிற்காக நவீன தொழில்நுட்ப முறையொன்று பயன்படுத்தப்படலாம்.

(5) சபை லொத்தர் பரிசுக்காக வழங்கப்படவுள்ள மோட்டார் காரின் வகையைத் தீர்மானித்தல் வேண்டும்.

(6) சபை பரிசை வென்ற நபருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(7) வெற்றியாளர் இலங்கையை வதிவிடமாகக் கொண்டிராத ஒருவராகத் காணப்படுமிடத்து, கூறப்பட்ட மோட்டார் காரின் உற்பத்தியாளரினால் அல்லது உற்பத்தி முகவரினால் அம் மோட்டார் காரானது வெற்றியாளரின் சீட்டில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு அண்மையில் உள்ள துறைமுகத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அதன் பின்பு, வெற்றியாளர் அந்நாட்டின் சட்டங்களுக்கு இணங்க கூறப்பட்ட மோட்டார் காரை எடுத்துச் செல்லல் வேண்டும்.

(8) வெற்றிபெறும் சீட்டு, கைமாற்றப்படத்தக்கதாகும்.

(9) சீட்டானது அதனை விற்பதற்கு அனுமதியளிக்கும் எந்த நாட்டிலும் விற்பனை செய்யப்படல் வேண்டும்.

6. சபை மேற்சொல்லப்பட்ட 2 (ஈ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட கொவிசெத தேசிய லொத்தரை, விவசாய, காணிகள் அமைச்சின் சார்பாக, அத்தகைய அமைச்சினால் நிறுவப்பட்ட விவசாயிகளின் நிதியத்திற்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும்:-

(1) வாரத்தின் ஒவ்வொரு திங்கட்கிழமையும் வாரமொருமுறையாக ஒரு சீட்டிழுப்பு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசையே உடையதாயிருத்தல் வேண்டும்.

(4) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஒன்று தொடக்கம் எழுபது (1- 70) வரையான இலக்கங்களுள் நான்கு இலக்கங்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். சுப்பர் பரிசைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, A தொடக்கம் Z வரையான ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஓர் எழுத்துத் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். A தொடக்கம் Z வரையான எழுத்துடன் ஒன்று தொடக்கம் எழுபது (1- 70) வரையான நான்கு இலக்கங்கள் ஒவ்வொரு சீட்டிலும் அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் தொடர் இலக்கமொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் மொத்த வரும்படியிலிருந்து நாற்பத்தேழு (47%) சதவீதமானது பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஏதேனும் ஒரு சீட்டின் நான்கு இலக்கங்களும் ஆங்கில எழுத்தும், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடன் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்குமிடத்து அச்சீட்டுக்கு சுப்பர் பரிசாக ஆகக் குறைந்தது பத்து மில்லியன் ரூபா (10,000,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் ஒரு சீட்டிலுள்ள நான்கு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட எவையேனும் நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஒரு மில்லியன் ரூபா (1,000,000) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்களும், ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடனும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபதாயிரம் ரூபா (20,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(உ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்களும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இரண்டாயிரம் ரூபா (2,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் இரண்டு இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இரண்டு இலக்கங்களுடனும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(எ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் இரண்டு இலக்கங்களும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இரண்டு இலக்கங்களுடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் நூறு ரூபா (100 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஏ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இலக்கமும் ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கத்துடனும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் நாற்பது ரூபா (40 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் ஒரு இலக்கம் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் இலக்கத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபது ரூபா (20 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஒ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபது ரூபா (20 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஓ) பரிசுகள் வழங்கப்பட்ட பின்னர், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட முழுப்பணத்தின் நாற்பத்தேழு (47%) சதவீதத்திலிருந்து ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருக்கும் பட்சத்தில், எஞ்சியிருக்கும் பணத்தொகையின் நாற்பது (40%) சதவீதமானது அடுத்த சுப்பர் பரிசுக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், எஞ்சிய அறுபது (60%) சதவீதமானது நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (I அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும் ;

(ஔ) ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்கு போதுமானதாக காணப்படாதவிடத்து, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணமானது அந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(க) அவசியமாகக் கருதப்படுமிடத்து, சபையினால் நடாத்தப்படும் வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசுகளை வழங்குவதற்கு பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணத்தினைப் பயன்படுத்துவதற்கு சபை உரித்துடையதாதல் வேண்டும்.

7. சபை மேற்சொல்லப்பட்ட 2 (உ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட சுபிரி வாசனா சம்பத தேசிய லொத்தரை, விளையாட்டுகள் அமைச்சு, சமூக சேவைகள் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு என்பவற்றின் சார்பாக, விளையாட்டுகள் அமைச்சினால், நிறுவப்பட்ட விளையாட்டுகள் நிதியத்திற்கும் மற்றும் சமூக சேவைகள் அமைச்சினால் நிறுவப்பட்ட சமூக சேவைகள் நிதியத்திற்கும் பாதுகாப்பு அமைச்சினால் நிறுவப்பட்ட ரணவிரு நிதியத்திற்கும் நிதி சேகரிக்கும் நோக்கத்திற்காக இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும், சனிக்கிழமையும் வாரமிருமுறை சீட்டிழுப்பு நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும் ;

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசையே உடையதாயிருக்கு வேண்டும்.

(4) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, ஒன்று தொடக்கம் எழுபத்தொன்று (1-71) வரையான இலக்கங்களுள் நான்கு இலக்கங்களும், அத்துடன் ஒன்று தொடக்கம் இருபத்தாறு (1- 26) வரையான இலக்கங்களிலிருந்து ஒரு சுப்பர் இலக்கமும் தெரிவு செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு சீட்டிலும் ஒன்று தொடக்கம் எழுபத்தொன்று வரையான (1- 71) இலக்கங்களுள் நான்கு இலக்கங்களும் ஒன்று தொடக்கம் இருபத்தாறு (1-26) வரையான இலக்கங்களிலிருந்து ஒரு சுப்பர் இலக்கமும் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் ஒரு தொடர் இலக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் மொத்த வரும்படியிலிருந்து நாற்பத்தேழு (47%) சதவீதமான ஒரு தொகை பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஏதேனும் ஒரு சீட்டிலுள்ள நான்கு இலக்கங்களும் சுப்பர் இலக்கமும், தெரிவு செய்யப்பட்ட நான்கு இலக்கங்களுடனும் சுப்பர் இலக்கத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அச்சீட்டுக்கு சுப்பர் பரிசாக ஆகக் குறைந்தது பத்து மில்லியன் ரூபா (10,000,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள நான்கு இலக்கங்களும், தெரிவு செய்யப்பட்ட எவையேனும் நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய சீட்டுக்கு ஒரு மில்லியன் ரூபா (1,000,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்களும், சுப்பர் இலக்கமும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடனும் சுப்பர் இலக்கத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஐம்பத்தாயிரம் ரூபா (50,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(உ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் மூன்று இலக்கங்களும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இரண்டாயிரம் ரூபா (2,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் இரண்டு இலக்கங்களும் சுப்பர் இலக்கமும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இரண்டு இலக்கங்களுடனும் சுப்பர் இலக்கத்துடனும் ஒத்திருக்குமித்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(எ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள எவையேனும் இரண்டு இலக்கங்களும் தெரிவு செய்யப்பட்ட எவையேனும் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்குமிடத்து அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் நூறு ரூபா (100 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஏ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் இலக்கமும் சுப்பர் இலக்கமும் தெரிவு செய்யப்பட்ட ஏதேனும் ஒரு இலக்கத்துடனும் சுப்பர் இலக்கத்துடனும் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் நாற்பது ரூபா (40 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள சுப்பர் இலக்கம் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் இலக்கத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபது ரூபா (20 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஒ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள ஏதேனும் ஓர் சுப்பர் இலக்கம் தெரிவு செய்யப்பட்ட சுப்பர் இலக்கத்துடன் ஒத்திருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கும் இருபது ரூபா (20 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஓ) பரிசுகள் வழங்கப்பட்ட பின்னர், பரிசுகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட முழுப்பணத்தின் நாற்பத்தேழு (47%) சதவீத்திலிருந்து ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருக்கும் பட்சத்தில், சொல்லப்பட்ட பணத்தின் நாற்பது (40%) சதவீதமான எஞ்சியிருக்கும் பணத்தொகையானது, அடுத்த சுப்பர் பரிசுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், எஞ்சிய அறுபது (60%) சதவீதமானது நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (I அ) உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவு வைக்கப்படுதலும் வேண்டும் ;

(ஔ) ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்கு போதுமானதாக காணப்படாதவிடத்து, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணமானது அந்த நோக்கத்திற்காக ஒதுக்கப்படல் வேண்டும் ; அத்துடன்

(க) அவசியமாகக் கருதப்படுமிடத்து, சபையினால் நடாத்தப்படும் வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பாக பரிசுகளை வழங்குவதற்காக, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணத்தை பயன்படுத்துவதற்கு சபையானது உரித்துடையதாதல் வேண்டும்.

8. சபை மேற்சொல்லப்பட்ட 2 (ஊ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஜாதிக சம்பத தேசிய லொத்தரை, சுகாதார அமைச்சினால் தாபிக்கப்பட்ட சுகாதார நிதியத்திற்கும் தொழில் அமைச்சினால் தாபிக்கப்பட்ட தொழிலாளர் நிதியம் பணம் சேகரிக்கும் நோக்கத்துக்காகச் சுகாதார அமைச்சு மற்றும் தொழில் அமைச்சின் சார்பாக, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும், சனிக்கிழமையும் வாரமிருமுறையாக இரு சீட்டிழுப்புகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு சீட்டும் ஒரு பரிசையே உடையதாயிருத்தல் வேண்டும்.

(4) சீட்டுக்களை இலக்கமிடல் , 00000 என்ற இலக்கத்திலிருந்து 99999 வரையும் (I) என்ற எழுத்தைத் தவிர்த்து ஆங்கில அரிச்சுவடியிலுள்ள A தொடக்கம் Z வரையான எழுத்தொன்றினால் அச்சிடப்படுதல் வேண்டும், ஒவ்வொரு சீட்டும் ஒன்று தொடக்கம் (1-10) பத்து வரையிலான இலக்கங்களிலிருந்து அதிர்ஷ்ட இலக்கமொன்றுடனும் அச்சிடப்படுதல் வேண்டும்.

(5) வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக, A தொடக்கம் Z வரையான I தவிர்ந்த ஆங்கில அரிச்சுவடியிலுள்ள எழுத்துக்களைக் கொண்ட ஒரு பீப்பாயிலிருந்து ஓர் எழுத்தும் ஒன்று தொடக்கம் பத்து (1- 10) வரையிலான இலக்கங்களைக் கொண்ட பீப்பாயிலிருந்து அதிஷ்ட இலக்கமொன்றும் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். மேலதிகமாக பூஜ்ஜியம் தொடக்கம் ஒன்பது (0- 9) வரையிலான இலக்கங்களைக் கொண்ட ஐந்து பீப்பாய்கள் ஒவ்வொன்றிலுமிருந்து ஒவ்வொரு இலக்கமாக ஐந்து இலக்கங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட ஒவ்வொரு சீட்டும் ஒரு தொடர் இலக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். சீட்டிழுப்புக்காக நவீன தொழில்நுட்ப முறையும் பயன்படுத்தலாம்.

(6) பரிசுகள் பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்க வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நாற்பத்தேழு (47%) சதவீதமான ஒரு தொகை, பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும் ;

(ஆ) ஒரு சீட்டிலுள்ள ஆங்கில எழுத்தும் அதிஷ்ட இலக்கம் மற்றும் ஐந்து இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்து அதிஷ்ட இலக்கம் மற்றும் ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் (5,000,000 ரூபா) குறையாத சுப்பர் பரிசு, அச்சீட்டுக்கு வழங்கப்படுதல் வேண்டும் ;

(இ) ஒரு சீட்டிலுள்ள அதிஷ்ட இலக்கமும் ஐந்து இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட அதிஷ்ட இலக்கம் மற்றும் ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய ஒவ்வொரு சீட்டுக்கு இரண்டு மில்லியன் ரூபா (2,000,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஈ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டு அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி ஐந்து இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட ஐந்து இலக்கங்களுடன் ஒத்திருக்கின்ற விடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு இலட்சம் ரூபா (100,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(உ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி நான்கு இலக்கங்களும் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி நான்கு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் பத்தாயிரம் (10,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி மூன்று இலக்கங்களுடன் இடமிருந்து வலமாக தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி மூன்று இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(எ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி இரண்டு இலக்கங்களும் இடமிருந்து வலமாகத் தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட கடைசி இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஐம்பது ரூபா (50 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஏ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள கடைசி இலக்கம் (வலது பக்கம்) தெரிவு செய்யப்பட்ட கடைசி இலக்கத்துடன் ஒத்திருக்கின்ற விடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் இருபது ரூபா (20 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஐ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதன் நான்கு இலக்கங்களும் இடமிருந்து வலமாகத் தொடச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் நான்கு இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஒ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சிட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் மூன்று இலக்கங்களும் இடமிருந்து வலமாகத் தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று இலக்கங்களுடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் நூறு ரூபா (100 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ஓ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டுக்களிலுள்ள அதிஷ்ட இலக்கமும் ஆங்கில எழுத்தும் தெரிவு செய்யப்பட்ட அதிஷ்ட இலக்கத்துடனும் ஆங்கில எழுத்துடனும் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் நூறு ரூபா (100 ரூபா) லழங்கப்படுதல் வேண்டும் ;

(ஔ) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள முதல் இரண்டு இலக்கங்களும் இடமிருந்து வலமாகக் தொடர்ச்சியாக வருகின்ற தெரிவு செய்யப்பட்ட முதல் இரண்டு இலக்கங்களுடன் ஒத்திருக்கின்றவிடத்து அத்தகைய சீட்டு ஒவ்வொன்றிற்கும் ஐம்பது ரூபா (50 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(க) ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சீட்டில் அல்லது சீட்டுக்களிலுள்ள ஆங்கில எழுத்து தெரிவு செய்யப்பட்ட ஆங்கில எழுத்துடன் ஒத்திருக்கின்றவிடத்து, அத்தகைய சீட்டு ஒவ்வொன்றுக்கும் இருபது ரூபா (20 ரூபா) பணத்தொகை வழங்கப்படுதல் வேண்டும் ;

(ங) வெல்லப்படும் பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட நாற்பத்தேழு (47% ) சதவீதமான பணத்தொகையில் ஏதேனும் பணத்தொகை எஞ்சியிருக்கும் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட மேலதிகப் பணத்தின் ஐம்பது (50%) சதவீதமானது, அடுத்த சுப்பர் பரிசு சீட்டிழுப்பிற்காக வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் எஞ்சிய (50%) சதவீதமானது நிதிச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (I அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுக்கிணங்க, பரிசு ஒதுக்க கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் ;

(ச) ஏதேனும் லொத்தர் சீட்டிழுப்பில், பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையானது, வெல்லப்பட்ட மொத்த பரிசுகளை வழங்குவதற்குப் போதுமானதாக காணப்படாத விடத்து, பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணமானது மீதிப்பணத்துக்காகப் பயன்படுத்தப்படல் வேண்டும் ; அத்துடன்

(ஞ) அவசியமாகக் கருதப்படுமிடத்து, சபையினால் நடாத்தப்படும் வேறு ஏதேனும் தேசிய லொத்தர் தொடர்பில் பரிசு ஒதுக்க கணக்கிலுள்ள பணத்தைப் பய்ன்படுத்துவதற்கு சபை உரித்துடையதாதல் வேண்டும்.

9. சபை மேற்சொல்லப்பட்ட 2 (எ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட செவன சுரண்டல் தேசிய லொத்தரை, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் சார்பாக, அவ்வமைச்சினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு பணம் சேகரிக்கும் நோக்கத்துக்காக, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) சர்வதேச ரீதியாக அங்கீகாரம்பெற்ற சுரண்டுவதற்கும் ஒத்திசைவுறுவதைப் பார்ப்பதற்குமான தொழில்நுட்பமானது சீட்டுக்களின் ஒவ்வொரு குழுக்களுக்குமான பரிசுகளை அடையாளம் காண்பதற்காக பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் அச்சிட்டுக்கு வழங்கப்பட்ட பரிசுகளின் வீச்சுக்கிணங்க பத்து ரூபா (10 ரூபா) அல்லது இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும். சீட்டுக்களின் ஒவ்வொரு குழுக்களுக்குமென, சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான சீட்டுக்கள், அச்சிடப்படுதல் வேண்டும். அச்சிடப்பட்ட எல்லாச் சீட்டுக்களும் விற்பனைக்கு விடப்படுதல் வேண்டும் ;

(3) சீட்டுக்களின் விற்பனையின் மொத்த வரும்படியிலிருந்து நாற்பத்தொன்பது சதவீதமான (49%) ஒரு தொகை, பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும். பரிசுகள் பத்து ரூபா (10 ரூபா) மற்றும் ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபா (1,500,000) என்ற வீச்சுக்கு உட்பட்டதாக சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் ;

(4) சீட்டிலுள்ள ஒரு சட்டத்தை மூடியிருக்கும் லேடெக்ஸ் பதார்த்தம் அகற்றப்படும் வரை, சீட்டுக்களின் கொள்வனவாளரால் உடனடிப் பரிசுகளைப் பார்க்க முடியாதிருக்கும் அத்தகைய முறையிலே சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்;

(5) ஒவ்வொரு சீட்டும் ஒரு சீட்டை வைத்திருப்பவர் பரிசை வென்றுள்ளாரா என்பதையும் மற்றும் அத்தகைய பரிசுக்கு உரிமைகோருவதற்கான செயல் நடவடிக்கை முறையையும் தீர்மானிப்பதற்கான முறையைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

10. சபை மேற்சொல்லப்பட்ட 2 (ஏ) என்னும் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட சமூர்த்தி சுரண்டல் லொத்தரை, சமுத்தி நிதியத்திற்கு பணம் சேகரிக்கும் நோக்கத்துக்காக இளைஞர் விவகார விளையாட்டுக்கள் சமுர்த்தி அமைச்சின் சார்பாக, இதன் கீழ் எடுத்துக்காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக நடாத்துதல் வேண்டும் :-

(1) விளையாட்டை நடாத்துவதற்காக, சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்ற சுரண்டுவதற்கும் ஒத்திசைவுறுவதைப் பார்ப்பதற்குமான தொழில்நுட்பமானது பின்பற்றப்படல் வேண்டும்.

(2) ஒவ்வொரு சீட்டும் அச்சீட்டுக்கு வழங்கப்பட்ட பரிசுகளிற்கிணங்க பத்து ரூபா (10 ரூபா) அல்லது இருபது ரூபா (20 ரூபா) என்ற விலையில் விற்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விளையாட்டுக்குமான, சபையினால் தீர்மானிக்கப்படும் அத்தகைய எண்ணிக்கையிலான சீட்டுக்களை, அச்சிடப்படலாம். அச்சிடப்பட்ட எல்லா சீட்டுக்களும் விற்பனைக்கு விடப்படுதல் வேண்டும் ;

(3) சீட்டுக்களின் விற்பனையின் வரும்படியிலிருந்து நாற்பத்தொன்பது (49%) சதவீதமான ஒரு தொகை, பரிசுகளை வழங்குவதற்காக ஒதுக்கப்படுதல் வேண்டும். பரிசுகள் பத்து ரூபாவிற்கும் (10 ரூபா) ஒரு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவுக்கும் (1,500,000) இடைப்பட்டதாக சபையினால் தீர்மானிக்கப்படல் வேண்டும் ;

(4) சீட்டிலுள்ள ஒரு சட்டத்தை மூடியிருக்கும் பதார்த்தம் அகற்றப்படும்வரை, சீட்டுக்களை வைத்திருப்பவரால் உடனடிப் பரிசுகளைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும் வகையிலே சீட்டுக்களை அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(5) ஒவ்வொரு சீட்டும் ஒரு சீட்டை வைத்திருப்பவர் பரிசை வென்றுள்ளாரா என்பதையும் பரிசு உரிமைகோருவதற்கான செயல் நடவடிக்கை முறையையும் தீர்மானிப்பதற்கான முறையையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

11. இவ்விதிகளின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருந்த போதிலும், பின்வரும் ஏற்பாடுகள் பொதுவாக ஏதேனும் தேசிய லொத்தர் சீட்டிழுப்பிற்கும் ஏற்புடையதாதல் வேண்டும் :-

(1) இவ்விதிகளினால் வெற்றிபெறும் சீட்டுக்களைத் தீர்மானிப்பதற்கான குறித்த ஒருமுறை அறிமுகப்படுத்தப்படாதவிடத்து ஏதேனும் தேசிய லொத்தரின் சீட்டிழுப்பு, ஒன்று அல்லது பல பீப்பாய்கள் அல்லது ஒரு சீட்டிழுப்பு இயந்திரத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நடாத்தப்படலாம் ;

(2) உடனடி பரிசுகளை தன்னகத்தே கொண்டிராத, சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் தேசிய லொத்தரின் ஒவ்வொரு சீட்டின் மீதும் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் :-,

(அ) லொத்தரின் பெயர் ;
(ஆ) ஒவ்வொரு சீட்டினதும் விலை ;
(இ) சீட்டிழுப்பின் இலக்கம் ;
(ஈ) சீட்டிழுப்பின் திகதி ;
(உ) சீட்டிழுப்பு நிகழும் இடம் ;
(ஊ) சீட்டானது ஒரு பரிசை வென்றுள்ளதா எனத் தீர்மானிக்கும் முறையும் அப்பரிசுக்காக விண்ணப்பிக்கும் முறையும் ;
(எ) லொத்தரானது சபையினால் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடாத்தப்படுகின்றது என்பது ;

(3) உடனடி பரிசுகளை தன்னகத்தே கொண்டிருக்கும், சபையினால் நடாத்தப்படும் ஏதேனும் ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டின் மீதும் பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் :-,

(அ) லொத்தரின் பெயர் ;
(ஆ) ஒவ்வொரு சீட்டினதும் விலை ;
(இ) சீட்டானது ஒரு பரிசை வென்றுள்ளதா எனத் தீர்மானிக்கும் முறையும் அப்பரிசுக்காக விண்ணப்பிக்கும் முறையும் ;
(ஈ) லொத்தரானது சபையினால் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடாத்தப்படுகின்றது என்பது ;

(4) சபையானது இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், ஆங்கில செய்தித் தாள்களில் தேசிய லொத்தர்களின் வெற்றிபெறும் இலக்கம் அல்லது இலக்கங்கள், அவற்றிற்கான பரிசுகளின்பெறுமதி அத்துடன் அறிந்திருப்பின் விடயத்திற்கேற்ப வெற்றியாளரின் அல்லது வெற்றியாளர்களின் பெயர் அல்லது முகவரி அத்துடன் அவசியமாகக் கருதப்படும் அத்தகைய வேறு தகவல்கள் போன்றவற்றையும் பிரசுரித்தல் வேண்டும் .

(5) கிழிந்த அல்லது உருக்குலைந்த சீட்டுக்கள் ஒரு லொத்தரின் ஒரு பரிசை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படுவதற்காக தகுதியற்றதாய் இருத்தல் வேண்டும். ஆயினும் அத்தகைய சீட்டுக்களை வைத்திருப்பவர்கள் கேள்விக்குட்பட்ட ஆவணங்களின் பரிசோதகர் அல்லது வேறொரு ஆளினால் இத்தகைய சீட்டுக்கள் உண்மையானவை என உறுதிப்படுத்துவதற்காக சபைக்கு ஆகும் செலவினங்களை செலுத்துதல் மூலம் பரிசுகள் வழங்கப்படுவதற்காக இவற்றையே சமர்ப்பித்தலும் வேண்டும்.

(6) ஒவ்வொரு லொத்தர் தொடர்பாகவும் அச்சிடப்பட்ட எல்லா சீட்டுக்களும் விற்பனைக்காக வைக்கப்படல் வேண்டும். சீட்டில் குறிப்பிடப்பட்ட விலையிலேயே சீட்டுக்ள் விற்பனை செய்யப்படல் வேண்டும். ஒவ்வொரு சீட்டிழுப்பிற்கு முன்னர் அக்குறித்த சீட்டிழுப்பிற்காக அச்சிடப்பட்ட, குறித்த சீட்டிழுப்பில் விற்பனை செய்யப்படாத எல்லா சீட்டுக்களும் ஆவணப்படுத்தப்பட்டு, இரத்து செய்வதற்காக கணக்காய்வாளரினால் அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(7) சபையானது ஒரு விசேட சீட்டிழுப்பின் மூலம் ஏதேனுமொரு, தேசிய லொத்தரின் சீட்டுக்களின் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன், அத்தேசிய லொத்தர் சீட்டுக்களின் தொடர் இலக்கத்திற்கு அல்லது வேறு ஏதேனுமொரு இலக்கத்திற்கு மேலதிக பரிசுகளை காலத்துக்குக்காலம் வழங்கலாம்.

(8) சீட்டிழுப்பு, மேற்பார்வை சபையின் முன்னிலையில் நடாத்தப்படுதல் வேண்டும். இச்சபை கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களத்தின் ஒரு பிரதிநிதியையும், பணிப்பாளர் சபையின் ஒரு உறுப்பினரையும் அல்லது தேசிய லொத்தர் சபையின் பொது முகாமையாளரை அல்லது மேலதிகப் பொது முகாமையாளரை அல்லது பிரதான நிதி அலுவலரையும் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரவரிசைக்குக் குறையாத தரத்தையுடைய பொலிஸ் அலுவலர் ஒருவரையும் கொண்டமைந்திருத்தல் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "மேற்பார்வை சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

(9) சீட்டிழுப்பானது, சபையின் உறுப்பினர்கள் அல்லது அலுவலர்கள் அல்லது சேவையாளர்கள் அல்லாத ஒரு நபர் அல்லது சில நபர்களினால் நடாத்தப்படுதல் வேண்டும் ;

(10) சபையின் தவிசாளர் சீட்டிழுப்பில் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் செயல்முறைக்கு இணங்க வெற்றிபெறும் இலக்கத்தை அல்லது எழுத்தை தெரிவு செய்யும் அந்த நேரத்தை தீர்மானித்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டதும், தெரிவு செய்யப்படும் வெற்றிபெறும் இலக்கம், அல்லது எழுத்து சட்டப்படி தெரிவு செய்யப்பட்ட இலக்கமாக அல்லது எழுத்தாக கருதப்படுதல் வேண்டும்.

(11) சீட்டிழுப்பின் நோக்கத்திற்காக, அடையாளமிடப்பட்ட இலக்கங்கள் அல்லது எழுத்துக்கள் உள்ள அம்சங்கள், சீட்டிழுப்பின் பின்னர் மேற்பார்வைச் சபையின் இரு உறுப்பினர் முன்னிலையில் ஒரு பாதுகாப்புப் பெட்டியினுள் இடப்பட்டு பூட்டு இடப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய பெட்டியானது, மேற்பார்வைச் சபையின் இரு உறுப்பினர்கள் முன்னிலையில் திறக்ககப்படல் வேண்டும். மேற்கூறப்பட்ட பெட்டியின் திறப்புகள் சபையின் தவிசாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சபையின் சிரேஷ்ட நிறைவேற்று அலுவலரின் கட்டுக்காப்பில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(12) தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்படும் வரை சீட்டிழுப்பின் பதிவுகளை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஒரு ஒழுங்கு முறையானது செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மேற்கொள்ளப்படவேண்டிய நடைமுறைசார்ந்த ஒழுங்குமுறைகளை சபையின் தவிசாளர் முடிவு செய்தல் வேண்டும்.

(13) லொத்தரின் சீட்டிழுப்பு தொடர்பில் பயன்படுத்தப்பட்ட எல்லா இலக்கங்கள் எழுத்துக்கள் மற்றும் ஏனைய எல்லா பதிவு செய்யும் பொருட்களும் ஒரே சீராக அவற்றின் உறுதிப்பாட்டிற்கு நியாயமாக அவசியமானவை என்பதாகப் பயனுறும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட தரங்கள் தர நிர்ணய நிறுவகத்தினால் உரிய முறையில் பரிசோதனையிடப்படுதல் வேண்டும்.

(14) பதினெட்டு வயதுக்கு கீழ்ப்பட்ட எவரேனும் ஆள் தேசிய லொத்தர்களை கொள்வனவு செய்யத் தகவுடையவர்களல்ல என்பதுடன் அத்தகையவர்களினால் ஏதேனும் அத்தகைய உரிமைக் கோரிக்கை பெறப்பட்டிருப்பின் சபை எவ்விதக் கொடுப்பனவையும் செய்தலாகாது.

(15) வெற்றிபெறும் சீட்டை வைத்திருக்கும் எவரேனும் ஆள், அதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு உரித்துடையவராதல் வேண்டும். சீட்டிழுப்பின் தினத்திலிருந்து ஆறு மாதங்களை (06) கொண்ட காலப்பகுதியொன்றுக்கு பரிசுகள் செல்லுபடியானவையாதல் வேண்டும். இக்காலப்பகுதிக்குப் பின்னர் உரிமைகோரப்படாத பரிசுகள் இழப்பிக்கப்படுதல் வேண்டும்.

12. விதி 2 என்பதில் குறிப்பீடு செய்யப்பட்ட தேசிய லொத்தர்களின் விற்பனைக்குப் பின்வரும் விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும் :-

(1) சபையானது, வியாபாரிகள் வலைப்பின்னல் மூலமாக செயற்படுத்தப்படும் விற்பனைகளுக்கு மேலதிகமாக, தேசிய லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் நோக்கத்துக்காக குறுகிய செய்தி சேவை (SMS) மற்றும் ஊடாட்ட குரல் துலங்கல் (IVR) போன்ற அத்தகைய தொலைத்தொடர்பு வசதிகளையும் பயன்படுத்துதல் வேண்டும்.

(2) சபையானது வழமையான கேள்வி நடவடிக்கை முறையைப் பின்பற்றி, கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரைத் தெரிவு செய்தல் வேண்டுமென்பதுடன், இந்நோக்கத்துக்காக ஓர் உடன்படிக்கையையும் செய்து கொள்ளல் வேண்டும் .

(3) சபையானது அங்ஙனம் பெறப்பட்ட சேவைக்களுக்காக, (2) ஆம் பந்தியின் கீழ் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறும், சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறும் கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனருக்கு ஒரு தரகைச் செலுத்துதல் வேண்டும்.

(4) சபை, கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனர் மற்றும் கையடக்கத் தொலைபேசியை பயன்படுத்துனர்கள் என்பவர்களுக்கிடையேயான தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக, சபையானது, ஒரு மூன்றாந் தரத்தினரை நியமிக்கலாம். மூன்றாந் திறத்தினர், பிழைகளுக்கும் தவிர்வுகளுக்கும் பொறுப்பாக்கப்படுவார் என்பதனால், பிழை இல்லாத செயற்பாட்டை மூன்றாந் திறத்தினர் உத்தரவாதம் செய்தல் வேண்டும்.

(5) மூன்றாந் திறத்தினருக்கு, சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறாக ஒரு தரகு செலுத்தப்படுதல் வேண்டும் ;

(6) கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனருக்கும், மூன்றாந் திறத்தினருக்கும், செலுத்தப்படற்பாலதான தரகு, ஏனைய விற்பனையாளர்களுக்கும், முகவர்களுக்கும் செலுத்தப்படற்பாலதான வழமையான விற்பனையாளர்கள் அல்லது முகவர்கள் வீச்சினுள் இருத்தல் வேண்டும்.

(7) வேறு ஏதேனும் கையடக்கத் தொலைபேசி வலைப்பின்னலைப் பயன்படுத்துனர்கள், சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக எந்த கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனருடன் சபை உடன்படிக்கையொன்றைச் செய்துள்ளதோ, அந்த கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரின் வலைப்பின்னலூடாக லொத்தர் சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வசதியைப் பயன்படுத்தலாம்.

(8) கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குனர், பயன்படுத்துனர் இவ்வசதியைப் எந்தளவுக்குப் பயன்படுத்த முடியுமோ அதற்கேற்ப, ஆகக்கூடிய தொகையொன்றை நிர்ணயிக்கலாம். ஏதேனும் துர்ப்பழக்கங்களைத் தவிர்க்கும் நோக்குடன் இது செய்யப்படலாம்.

(9) வெற்றியாளர்களுக்கான பரிசுகள், நடைமுறையிலுள்ள தேசிய லொத்தர்களுக்கான பரிசுக் கட்டமைப்புகளுக்கிணங்க வழங்கப்படலாம்.

(10) லொத்தரொன்றின் பிரதான தரவு மையத்திலிருந்து ஒவ்வொரு தேசிய லொத்தர் சீட்டிழுப்புக்கும் தொழிற்பாட்டு நோக்கத்துக்காக சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான ஒரு இலக்க வீச்சு, கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனர்களுக்குக் குறித்தொதுக்கப்படலாம்.

(11) கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனர் உடன்படிக்கைகளுக்கிணங்க, கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனருக்கும் மூன்றாம் திறத்தினருக்கும் உரித்தாக்கப்படற்பாலதான தரகுகளைக் கழித்த பின்னர் அத்தகைய சேவை வழங்குனருக்கு குறித்தொதுக்கப்பட்ட இலக்கத்தின் வீச்சில் விற்கப்பட்ட சீட்டுக்களின் வரும்படியைச் சேவை வழங்குனர், சபைக்கு கொடுத்துத் தீர்த்தல் வேண்டும்.

(12) சந்தைப்படுத்தல் மேம்பாட்டு வழிமுறையொன்றாக காலத்துக்குக்காலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆறுதல் பரிசுகள் வழங்கப்படலாம்.

(13) கையடக்கத் தொலைபேசியின் பதிவு உள்ளவருக்கே பரிசுகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(14) கையடக்கத் தொலைபேசிக்கூடாக கொள்வனவு செய்யப்பட்ட லொத்தருக்காக ஒரு பரிசு இருக்குமிடத்து, கையடக்கத் தொலைபேசியின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் கையடக்கத் தொலைபேசிக்கான கட்டணப்பட்டியலின் பெறுமதியிலிருந்து ரூபா 1,000 வரையிலான தொகையை சேவை வழங்குனர் எதிரீடு செய்தல் வேண்டும். பட்டியலில் செலுத்தப்பட வேண்டியுள்ள தொகை 1,000 ரூபாவுக்குக் குறைவானதாகவிருக்குமிடத்து, பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரின் கையடக்கத் தொலைபேசிக்கான கட்டணப்பட்டியலில் அத்தொகை வரவாகப் பதியப்படுதல்

வேண்டும். அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்வதற்கு முன்னர் சபையிடமிருந்தும் மூன்றாந்திறத்தவரிடமிருந்தும் பரிசுகளின் வெற்றியாளர்களின் சான்றுப்படுத்தப்பட்ட நிரலொன்றைக் கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குநர் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(15) ஏனைய சேவை வழங்குனர்கள் மூலமாகப் பிறப்பிக்கப்பட்டு இயக்கப்பட்ட லொத்தர்களுக்கான பரிசுக்கான கொடுப்பனவுகள் தொடர்பில் அவர்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல் எந்த கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனருடனும் மூன்றாந்திறத்தினருடனும் சபை இத்தொழிற்பாட்டைச் செயற்படுத்த உடன்பட்டுள்ளதோ, அந்த கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரதும் மூன்றாம் திறத்தினரதும் பொறுப்பாதல் வேண்டும்.

(16) சமர்ப்பிக்கப்பட்ட பரிசுகளின் சரிபார்க்கப்பட்ட விபரமான பரிசுகள் பட்டியலின் அடிப்படையில், கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரால் பரிசின் வெற்றியாளருக்கு செலுத்தப்பட்ட அல்லது வரவு வைக்கப்பட்ட 1,000 ரூபா வரையான மொத்தப் பரிசுப் பெறுமதியை, சபை கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனருக்குச் செலுத்துதல் வேண்டும்.

(17) கொடுப்பனவு சரியான திறத்தினருக்குச் செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துநர் இறுதிக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார் என்பதற்கான பட்டியலைச் சமர்ப்பித்ததன் பின்னர் மட்டுமே சபையினால் கையடக்கத் தொலைபேசி பயன்படுத்துனருக்கு 1,000 ரூபாவுக்கு மேற்பட்ட பரிசுகள் செலுத்தப்படுதல் வேண்டும். சபையானது கொடுப்பனவைச் செலுத்துவதற்கு முன்னர், கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரிடமிருந்து ஆளடையாளத்தைச் சரிபார்த்து பதிவேட்டின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, ஒரு சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(18) வெற்றியாளர்கள், காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் ஏதேனும் அரசாங்க வரிகளுக்கு உட்பட்டவர்களாதல் வேண்டும்.

(19) (SMS) லொத்தர் விற்பனைக்கான குறித்தொதுக்கப்பட்ட வீச்சுத் தொடர்பில், தரவு பதிவிறக்கம் எதிர்பாராத மின்சார தவறு அல்லது அத்தகைய தன்மைத்தான வேறு ஏதேனும் எதிர்பாராத தொழிற்பாட்டு பிரச்சினை ஏற்படும்போது, நாளாந்த சீட்டிழுப்புக்களை நடாத்துவதற்கு சபையை இயலச் செய்வதற்காக, ஏதேனும் குறித்த ஒரு லொத்தர் சீட்டிழுப்புக்காக SMS லொத்தர் விற்பனைக்காக ஒதுக்கப்பட்ட சொல்லப்பட்ட இலக்க எல்லையை இரத்துச் செய்வதற்கான உரிமையை சபை தனக்கென ஒதுக்குகிறது. ஆயினும் சொல்லப்பட்ட இரத்து செய்தலினால் பாதிக்கப்படும் கொள்வனவுகாரர்கள் இரத்து செய்யப்பட்ட கொள்வனவில் மொத்த பெறுமதி வரையில் எவ்விதக் கட்டணமும் செலுத்தாது சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும்.

(20) தேசிய லொத்தர்களின் கொள்வனவுக்காரர்கள் சபையினதும், கையடக்கத் தொலைபேசிச் சேவை வழங்குனரதும் எல்லா விதிகளுக்கும் அமைந்தோராதல் வேண்டும்.

13. 1981 ஆண்டு மே மாதம் 29 ஆந் திகதிய, 143 ஆம் இலக்கமிடப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க தேசிய லொத்தர் சபையின் விதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

14. இவ்விதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய –

"தேசிய லொத்தர் சபை" என்பது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை எனப் பொருள்படும் ;

"தேசிய லொத்தர்" என்பது நிதிச் சட்டத்தின் பிரிவு 14 (1) இன் கீழ் தேசிய லொத்தர் சபையினால் நடாத்தப்படும் ஒரு லொத்தர் எனப் பொருள்படும்.

2- 466

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ்வர்த்தமானிகளை WWW. documents. gov. lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.